1967 ஜூலை 11]

தைப் பெற்றிருக்கிருர்கள் என்று அழுத்தந்திருத்தமாகச் சொல்ல விரும்புகிறேன்.

திரு. செ. பாலசுப்பிரமணியன்: சார், நானே அந்தப் பாலே குடித்திருக்கிறேன், இரண்டு மூன்று நாட்களாக. பாலேப் பற்றிய அனுபவம் எனக்கு உண்டு. குடிக்க முடியாத அளவிற்கு நாற்றம் வந்தது.

(பதில் இல்லே.)

மண் எண்ணெய்

*247 வின.—**திரு. வி. கே. கோதண்டராமன்:** மதிப்பிற்குரிய கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்வி களுக்குப் பதிலளிப்பாரா--

(அ) 1960 முதல் 1966 வரை நமது ராஜ்யத்தில் மண் எண்ணெய் எங்கெங்கே எடுக்கப்படுகிறது?

(இ) எந்தத் துறையில்?

THE HON. THIRU V. R. NEDUNCHEZHIYAN:

(a) No mineral oil has so far been exploited in this State.

(b) Does not arise.

திரு. வி. கே. கோதண்டராமன்: இதற்கான ஆராய்ச்சி செய்யப் பட்டு வந்ததே. இனிமேலாவது எந்த அளவுக்கு கிடைக்கும் என்று பார்க்க ஏற்பாடு செய்ய உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தின் கடற்கரையோரப் பகுதிகளில் எண்ணெய் கிடைக்கும் என்று சொல்லப்பட்டதன் காரணமாக 1958-59-லிருந்து ஆராய்ச்சி தொடர்ந்து நடக்கிறது. இதுவரையில் காரைக்கால், கொள்ளிடப் பகுதி, பாம்பன் முதலிய இடங்களில் துளேகள் போடப்பட்டிருக்கின்றன. ரஷ்ய வல்லுநர்களுடைய உதவியுடன் பட்டுக்கோட்டைப் பகுதியில் இரண்டு துளேகள், 259 மீட்டருக்கு ஒன்றும், 988 மீட்டருக்கு ஒன்றும் போடப்பட்டன. அதே போன்று கந்தர்வகோட்டை முதலிய இடங்களிலும் துளேகள் போட திட்டம் உண்டு. ஆனல் எண்ணெய் இருக்கக் கூடும் என்பதற்கு அறிகுறிகள் இருந்தாலும், வாணிகம் செய்யும் அளவிற்கு குறிப்புகள் இன்னும் கிடைக்கவில்லே. ஆராய்ச்சி தொடர்ந்து நடக்கிறது.

விளேயாட்டு வீரர்களுக்கு ஓய்வூதியம்

*248 வின—**திரு. எஸ். சிவசுப்பிரமணியன்:** மதிப்பிற்குரிய கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்வி களுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வயது முதிர்ந்த விளேயாட்டு வீரர்களுக்குப் பென்ஷன் வழங்கும் திட்டம் ஏதேனும் அரசாங்கத்தின் பரிசீலனேயில் இருக்கின்றதா?